தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 8 2008 மே கனி 5

## உதவி தேவைப்படுகிறது

உன்னால் ஒரு டாக்டராக அல்லது ஒழுங்கும் நேர்த்தியுமான ஒரு நர்ஸாக இருக்கமுடியாவிட்டால் உன்னுடைய தெருவிலுள்ள ஒரு நோயாளியை அழைத்து சில ஆறுதலளிக்கலாமே



உன்னால் பணம் கொடுக்க முடியாவிட்டால் நீ ஒரு சந்தோஷ வார்த்தையை எதிர்நோக்கும் மக்களுக்கு எப்போதும் கொடுக்கலாமே, எந்த நாளிலும் அல்லது எந்த வருடத்திலும். தேவன் உன்னை எப்போதும் பயன்படுத்த ஆசைப்படுகிறார். பணம் ஒருபோதும் இதையெல்லாம் செய்யாது; அவர் கோடையிலும், குளிரிலும், வசந்தத்திலும், பனியிலும் சேவை செய்வதற்கு தன்னார்வமிக்க ஆத்துமாக்கள் தேவையுள்ளவராயிருக்கிறார்

*-VOTI*



**வாழ்க்கை குறுகினது**

**மரணம் உறுதியானது**

**பாவமே காரணமானது**

**கிறிஸ்துவே பரிகாரியானவர்**

உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (இயேசுவே) –யோவான் 1:29

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 மே - 2008 கனி - 6


ஆசிரியருரை

# மூலைக்கல்

## Cornerstone




"ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உறைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான **மூலைக்கல்லாயிருக்கும்,** விசுவாசிக்கிறவன் பதறான்" என்று ஏசா.28:16-ல் ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டபடியே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலைக்கல்லாக கொடுக்கப்பட்டார். அவர் முதலாவது எருசலேமிலே தம்முடைய பணியைத்துவங்கினார். பிதாவாகிய தேவனால் முன்குறிக்கப்பட்டபடியே அவருடைய ராஜ்யமாகிய சபை முதலாவது எருசலேமிலே ஆரம்பிக்கப்பட்டது. ஏனெனில், அது தேவனுடைய நகரம் என்றும், தாவீதின் நகரம் என்றும் அழைக்கப்பட்டது. "அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்று லூக்கா24:47-ல் சொல்லப்பட்டபடி எருலேம் தொடங்கி அவருடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் எடுத்துச்செல்லப்பட்டது. இயேசுகிறிஸ்துவே அதற்கு மூலைக்கல்லாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் தோன்றினார் என்ற செய்தி உலகம் அறிந்த உண்மை. யூதமக்களோ இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் புறம்பே தள்ளினர்.

ஜனங்களுக்கு அவர் உவமையாக பேசும்போது; "அவர் அவர்களைப் பார்த்து: வீடு கட்டுகிறவர்கள் **ஆகாதென்று தள்ளின கல்லே,** மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன?" என்ற கேள்வியை எழுப்பினார் (லூக்.20:17). இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக, மனிதனை இரட்சிக்கும்படியாக, அநேக நன்மைகளை செய்கிறவராக வந்தபோதும்

தேவனுடைய ஜனங்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. சில கிராமங்களில் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இயேசு: அவர்களை நோக்கி; உங்களால் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தை நினைவு படுத்தினார். அந்த ஜனங்களோ வேதவாக்கியங்களின் கருத்தை உணராமலும் தேவனுடைய வார்த்தைக்குப் பயப்படாமலும் அவரை ஆகாதென்று தள்ளினர். பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி வகைதேடி ஜனங்களை தூண்டிவிட்டு பிலாத்துவிடம் ஒப்படைத்தனர். பிலாத்து "அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான். பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச்சொன்னான். ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக்கேட்டார்கள்" (லூக்.23:14-18). இப்படியே அவரை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார்கள்.

அவரை எருசலேமிலே மூலைக்கல்லாக வைத்த பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார். ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று. "அந்தக் **கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான்...**" என்று லூக்.20:18-ல் சொல்லப்பட்டபடி அநேர் முதல் நூற்றாண்டில் அவருடைய ஜீவனுள்ள மார்க்கத்தை அழிக்க நினைத்தனர் ஆனால் அவர்களோ, நொறுங்கிப்போனார்கள். அதுமட்டுமல்ல, கமாலியேல் என்ற பரிசேயன் ஆலோசனை சங்கத்தில் எழுந்து தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான். ஆம், அன்பானவர்களே இந்த மார்க்கத்தை அழிக்கும்படியாக இம்மட்டும் எத்தனையோபேர் எழும்புகிறார்கள். ஆனால், நாளடைவில் அவர்கள் இருக்கும் இடம் தெரியாமற்போய்விடுகிறார்கள். ஏனென்றால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான் என்று கர்த்தர் சொன்னபடியே நொறுங்கிப்போகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சவுலாக இருந்தகாலத்தில் இம்மார்க்கத்திற்கு விரோதமாக செயல்பட்டான் அப்பொழுது கர்த்தர் "முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்

என்றார்" (அப்.9:5). முள்ளில் உதைத்தால் உதைக்கிறவர்களுக்குத்தான் வேதனை, அது அவனைக் குத்தும். அதைப்போல அவரால் ஏற்படுத்தப்பட்ட ஜீவனுள்ள மார்க்த்தை எதிர்த்தவர்கள் நொறுக்கப்பட்டார்கள்.

மேலும், நாம் லூக்கா20:18-ல் தொடந்து வாசிக்கிறோம், அது எவன்மேல் விழுமோ அவனை **நசுக்கிப்போடும்** என்றார். இது தீர்க்கதரிசியாகிய தானியேலில் சொன்னபடி எல்லா ராஜ்யங்களையும் நசுக்கிப்போட்டு நிலைநிற்கிறது. "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்று தானியேல்2:44-ல் சொல்லப்பட்டபடி எல்லாராஜ்யங்களையும் நசுக்கிப்போட்டது. அத்தோடு எல்லா ராஜ்யங்களும் நொறுங்கிப்போயின. ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினால் எருசலேமிலே 3000 அங்கத்தினருடனே ஆரம்பிக்கப்பட்ட ஆவிக்குரிய ராஜ்யம் இன்றும் வெற்றிநடைபோடுகிறது. அதைவிசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவர்களை கர்த்தர் இரட்சித்து தம்முடைய ராஜ்யமாகிய சபையிலே சேர்த்துவருகிறார்.

இந்தக்கல்லின் மீது விசுவாசம் வைக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை. "அந்தப்படியே: இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் **வெட்கப்படுவதில்லை** என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது" என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதுகிறார் (1பேது.2:6). நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிப்பீர்கள் என்றால் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அவர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, அல்பாவும், ஓமெகாவும் என்று திருவுளம்பற்றுகிறார். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவன் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலையடைகிறான். ஆகையால் பவுல் ரோமாபுரி சபையாருக்கு எழுதும்போது "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்கிறான் (ரோம.1:16). அது உங்களுக்கும் பெலனைக் கொடுக்கக்கூடியது. எப்பொழுது என்றால்? நீங்கள் விசுவாசிக்கும்போது! தங்களுடைய சுயத்தினால் அநேக காரியங்களை

செய்து நாளடைவில் வெட்கப்பட்டு தலைகுனிந்து நிற்கிற அநேகரை நாம் அநுதின வாழ்க்கையில் காண்கிறோம். மூலைக்கல்லாகிய கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிக்கும்போது அப்படி வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. கர்த்தர் உங்களை வெட்கப்படாத அங்கமாக மாற்றுவார்.

ஏசாயா சொல்லும்போது; "அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும் என்று எழுதுகிறார். அநேகருக்கு சோதனை வந்தவுடன் சோர்ந்துபோகின்றனர். ஆண்டவருக்கும் சோதனை வந்தது; எப்பொழுது? என்றால் ஞானஸ்நானம் பெற்ற பின்பு வந்தது. "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" (மத்.4:1). தேவனுடைய அனுமதியினால் இது நடைபெற்றது. யோபுவை பிசாசு சோதிக்கும்போது தேவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டான். அதைப்போல பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவரால் வனாந்தரத்திற்கு கொண்டுசெல்லப்பட்டார். அவர் பரீட்சிக்கப்பட்ட கல். கட்டிடம் கட்டுகிறவர்கள் கற்களை முதலாவது சரிசெய்கிறார்கள் அதன்பின்பே கட்டிடத்தில் வைத்துக்கட்டுகிறார்கள். பிதாவாகிய தேவன் மூலைக்கல்லை பரீட்சிக்க ஒப்புக்கொடுத்தார். இந்த சோதனையில் ஆண்டவர் பிசாசை ஜெயித்தார். இன்றைக்கு உங்களுக்கும் எனக்கும் அநேக பரீட்சை வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை சகித்து ஏற்றுக்கொண்டு அதை ஜெயிக்கவேண்டும். சோதனைகளை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என வேத வசனம் நமக்குப்போதிக்கிறது.

மேலும், இயேசுவானவரை தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கல் அது ஜீவனுள்ள கல் என வேதம்போதிக்கிறது. "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:4,5). அவர் மீது உங்களுடைய வாழ்க்கை கட்டடத்தை துவங்கவேண்டும். ஏனெனில் அவர் ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார். நீங்களும் ஜீவனுள்ள கற்களாக மாறவேண்டும். "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்கிறார் (வெளி.1:18). அவருடைய கல்லறை மட்டும் இன்றும் திறந்தே இருக்கிறது. அவரை தேடிப்போனவர்களுக்கு தேவதூதர்கள் சொன்ன பதில் என்ன? உயிரோடிருக்கிறவரை நீங்கள்

மரித்தோரிடத்தில் தேடுகிறது என்ன? என்றார்கள். ஆம், அன்பானவர்களே, அவர் இதோ, சதாகாலங்களிலும் ஜீவனுள்ள மூலைக்கல்லாக உயிரோடிக்கிறார்.

"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தல தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று மிக தெளிவாக பவுல் எபேசு சபைக்கு எழுதுகிறார் (எபே.2:19-21). நீங்களும் இவ்விதமாக பிதாவாகிய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மூலைக்கல்லாகிய அவர் மீதும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மீதும் கட்டப்பட பிரயாசப்படுங்கள். முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள்; "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என அப்.2:42-ல் காண்கிறோம். இவ்விதமாக நிலைத்திருந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு**
**1தீமோ.4:15.**

**வேத அறிவுப்போட்டி எண் 92-ல் வெற்றிபெற்றவர்கள்**


| | |
|---|---|
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் |
| G.A. ஜான்சன் | -திருச்சி |
| V.கோவலன் | -மதுரை |
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| IRA. எத்திராஜன் | -சங்கரி |
| P. அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| Mrs. மெல்ஸிடா | -திண்டுக்கல் |
| R. கஸ்தூரி | -ஒட்டாநத்தம் |
| J.நிர்மலாஜான் | -மதுரை |
| G.P. ஏசையன் | -கோபி |
| S. சசிகுமார் | -மணலி |
| K.M. ஜான் | -ஜெங்கொண்டம் |
| R. அருண்குமார் | -பிடாரியூர் |
| R. பால் சாமுவேல் | -பிடாரியூர் |
| N.கமலவேணி | - சென்னை |
| A.ஜோதிகாந்தம் | - போடப்பாறை |
| K.விமலா | -கல்வெட்டு |

**வேத அறிவுப்போட்டி எண் 92-ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.நெகேமியா | -நெகே.13:18 |
| 2.காரிருளே | -யூதா13 |
| 3.அகாஸ்வேருராஜா | -எஸ்.2:17 |
| 4.புதிய பாட்டை | -வெளி.5:10 |
| 5.யோபு | -யோபு9:15 |
| 6.முடிவு | -மத்.24:14 |
| 7.செவி | -சங்.66:18 |
| 8.இயேசு | -மாற்.16:15 |
| 9.முறிவு | -நீதி.14:28 |
| 10.அநேக அடிகள் | -லூக்.12:47 |

# ஆத்தும ஆதாயம் செய்தல்
# Converting Souls

*-J.C.Choate*



பிரசங்கியாரும், சபையின் எல்லா அங்கத்தினர்களும் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளையாயிருக்கிறது (மாற்கு 16:15). இந்தப் பணி போதிப்பதின் மூலமாகவும் கிறிஸ்துவினுடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலைப் பற்றி அறிவித்து (ரோமர் 10:17) அதை மக்கள் விசுவாசிக்கும்போது அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக, கர்த்தர் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்படியும்படி ஊக்கப்படுத்த வேண்டும் (அப்போ 2:38) இதை வேறு விதமாகச் சொல்வதென்றால் கர்த்தருடைய கட்டளை உள்ளிட்ட சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின்மூலம் ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடமாக மாற்றி அவர்களுடைய சிந்தனை, அவர்களுடைய செயல்கள், மேலும் அவர்கள் பாவியாய் இருந்த நிலையிலிருந்து இரட்சிக்கப்படும்படி உதவுகிறோம் (அப்போஸ் 3:19).

உலகம் மிகப்பெரிய இடம் ஆகவே ஒரு சராசரி கிறிஸ்தவனோ அல்லது பிரசங்கியாரோ கூட எப்படி உலகமெங்கும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும்? உண்மையாகவே அவர்கள் தாங்கள் இருக்கின்ற இடத்திலேயே தொடங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் போதிக்கவும் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தங்கள் குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள் மேலும் நகரங்கள் கிராமங்கள் மற்றும் அவர்களைச் சுற்றி இருக்கின்ற யாவருக்கும் போதிக்க வேண்டும். இப்படி தொடர்ந்து செய்யும்பொழுது அவர்கள் எண்ணிக்கையிலும் பெலத்திலும் வளர்ந்து அதிகமதிகமான மக்களை சென்றடையும்படி சென்று கொண்டே இருக்கின்றார்கள். இப்படித்தான் சுவிசேஷம் இறுதியாக பூமியனைத்தையும் சென்றடைகிறது.

பிரசங்கியார் சபையினுடைய மற்ற அங்கத்தினர்களைக் காட்டிலும் தன்னுடைய முழு நேரத்தையும் கர்த்தருடைய பணிக்குக் கொடுப்பதால் அவருடைய பணி ஆத்துமாக்களை முழுமையாக மாற்றுவதில் எப்படி இருக்கின்றது என்பதைப் பற்றிப் பார்போம்.

இயற்கையாகவே முதலாவது அவர் முழுமையாக மனமாற்றம் அடைந்து தான் போதிப்பதிலே முழு நம்பிக்கை கொண்டிருந்தால்தான் சுவிசேஷத்தை கேட்கிற யாரையாகிலும் கிறிஸ்துவினிடமாக மனமாற்றமடையும்படி ஊக்கப்படுத்தமுடியும்.

முதலாவது ஒருவர் மற்றவர்கள் இரட்சிக்கப்படும்படியான சத்தியத்தை நன்றாக புரிந்து கொண்டிருக்க வேண்டும். முதலாவது ஒருவர் சத்தியத்தைக் கேட்க வேண்டும் ஏனென்றால் விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலே வரும் (ரோமர் 10:17). ஒருவர் தேவனையும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதையும் கண்டிப்பாக விசுவாசிக்கவேண்டும் என்பதை பிரசங்கியார் அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால் விசுவாசமில்லாமல் தேனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரே 11:6; யோவான் 14:1). ஒருவர் தன்னுடைய எல்லா பாவங்களையும் விட்டு முற்றிலும் மனந்திருந்தியிருக்க வேண்டுமென்பதை அறிந்திருக்க வேண்டும். மனந்திரும்புதல் இல்லாவிட்டால் ஒருவர் அழிந்து போவார் (லூக்கா 13:3). மேலும் தேவன் எங்குமுள்ள மனிதர்யாவரும் மனந்திரும்பவேண்டுமென்று கட்டளையிடுகிறார் (அப்போஸ் 17:30). பரலோகத்திருக்கிற பிதாவுக்கு முன்பாக கிறிஸ்து ஒருவனை அறிக்கை செய்யவேண்டுமென்றால் அவன் இந்த பூமியிலே மற்றவர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும் (மத்தே 10:32). மேலும் ஒருவர் கண்டிப்பாக ஞானஸ்நானம் பெறவேண்டும், அதாவது பாவ மன்னிப்பு அல்லது ரட்சிப்புக்கென்று தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படவேண்டும்.

ஒருவர் இந்த உண்மைகளையெல்லாம் வேத வாக்கியங்களின்படி அப்போஸ்தலர்களின் நடபடிக்கையில் காணப்படுகின்ற இரட்சிக்கப்பட்ட மாதிரிகளிலே சம்பந்தப்பட்ட மக்கள் மீட்கப்படும்படி தேவனுக்கு எப்படி கீழ்ப்படிந்தார்கள் என்பதையெல்லாம் அறிந்து வைத்திருப்பதோடு, இந்த சத்தியத்தை யாருக்குப் போதிக்கின்றாரோ அல்லது யாருக்கு பிரசங்கிக்கின்றாரோ அவர்களுடைய மனங்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் விதத்தில் போதிக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமானால் அவர் முயற்சி எடுத்துப் பல இடங்களுக்குச் சென்று பலரை சந்தித்து வேதத்தை அவர்களுக்குப் போதிக்கும்படியான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். பிரசங்கம் செய்வதிலும் கூட இதே முறையே சரியாகும். அவர் சபையிலே கூடிவருகின்ற மக்களுக்கு பிரசங்கிக்கும் படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அதுபோலவே பல கூட்டங்களிலும் பிரசங்கிக்கும்படி ஒழுங்கு செய்யவேண்டும். இவைகளை செய்யும்படியான வாய்ப்புகள் பிரசங்கியார் எவ்வளவு பேருக்கு பிரசங்கிக்க முடியுமோ, அது அவருடைய வாஞ்சையோடு எடுக்கும் முயற்சிகளைப் பொறுத்தது.

ஆனால் பிரசங்கியார் கர்த்தருடைய சபையைப்பற்றியும் அது எங்கே துவங்கியது என்பதைப் பற்றியும் எப்பொழுது துவங்கியது என்பதைப் பற்றியும் யார் அதைக்கட்டியது என்பதைப் பற்றியும் எத்தனை சபைகள் இருக்கின்றன அவற்றின் பெயர், அஸ்திபாரம், அதன் தலைவர் யார்? அதனுடைய இரட்சகர் யார்? என்பன போன்ற உண்மைகளைப் பற்றியும் மிகத்தெளிவாக புரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துவோமாக. கிறிஸ்து சபையை (மத்தேயு 16:18) எருசலேமிலே கட்டினார். சுமார் கி.பி.33ம் வருடத்திலே கட்டினார் என்பது உண்மை (அப்போ 2) . அவர் ஒரே சபையைக் கட்டினார் (எபேசியா 4:1-6). அது கிறிஸ்துவின் பெயரையே தரித்ததாயிருக்கிறது (ரோமர் 16:16). அதின் அஸ்திபாரம் கிறிஸ்துவே (1கொரி 3:11). கிறிஸ்துவே அதன் தலைவராய் இருக்கிறார் (கொலோசேய் 1:18). மேலும் கிறிஸ்துவே அதன் ரட்சகராய் இருக்கிறார் (எபேசியர் 5:23). ஒருவர் பிரிவினை சபையாரின் போதனைகளும் அவர்களுடைய சபைகளும் தேவவசனங்களின்படி எப்படி தவறு என்பதையும் பரலோகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் கிறிஸ்துவின் சபையிலே அங்கங்களாக இருந்து இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் தேவனுடைய வார்த்தைகளின்படி நிருபிக்க வேண்டும். கிறிஸ்து அவருடைய சபையிலே இரட்சிக்கப்பட்டவர்களைச் சேர்த்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும். (அப்போஸ் 2:47). சபை இரட்சிப்பதில்லை ஆனால் கிறிஸ்து இரட்சிக்கிறார். ஆகவே அவர் சபையை இரட்சிக்கிறார் அதனுடைய பொருள் என்னவென்றால் ஒருவர் இரட்சிக்கப்படவேண்டுமானால் கிறிஸ்துவின் சபையிலே இருக்க வேண்டுமென்பதே.

மேலும் தொடர்ந்து பார்ப்போமானால் தொழுகையை குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதையும் வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகெடுக்கும்படி கர்த்தருடைய மக்கள் கூடிவரவேண்டும் என்பதையும் (அப்போஸ் 20:7), அவர்கள் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும் படியாகவும் (2 தீமோத் 2:15), அவர்கள் தங்கள் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்ளும் படியாகவும் (அப்போஸ் 2:42), அவர்கள் வாயினாலே மட்டும் தேவனை துதித்துப்பாடும் படியாகவும் (எபேசியர் 5:19. கொலோ 3:16) எபிரேயர் 13:15) மேலும் தேவனுடைய ஜனங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக வாரத்தின் முதல் நாளிலே கொடுக்கும்படியாகவும் ( 1கொரிந்தியர் 16:2) பிரசங்கியார் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கின்ற மக்களுக்கு கிறிஸ்தவ வாழ்க்கை உலகம் கொடுக்கக் கூடியதை விட அதிகமாக கொடுக்கும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதித்தில் பிரசங்கிக்க வேண்டும்.

அவர்கள் ஒருநாள் மரித்து தேவனுடைய நியாயசனத்தின் முன்பாக நிற்க வேண்டும். தேவனை சந்திக்க வேண்டும், நித்தியத்தை பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ கழிக்க வேண்டுமென்பதை கேட்கின்றவர்கள் தங்களை அப்படிப்பட்ட நிலையை சந்திக்கும்படி ஆயத்தப்படுத்த வேண்டும் *(1யோவான் 2:15-17; கொலோ 3:17; எபிரேயர் 9:27; மத்தேயு 25:16)*.

கிறிஸ்துவினிடத்தில் ஆத்துமாக்களை வழிநடத்த வேண்டுமென்றால் பிரசங்கியார் பலவிதமான தவறுகளுக்கு பதில் அளிப்பதோடு அநேக சத்தியங்களையும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். இது அதிகமான படிப்பும் உழைப்பும் தேவைப்படும் ஒன்றாகும் அதனுடைய அர்த்தம் என்னவென்றால் இரட்சிப்பை இழந்து போன மக்களைக் குறித்து கருத்தான கரிசனையோடு அவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டியதின் அவசியத்தை உணரும்படியாகச் செய்ய வேண்டும். தான் தொடர்பு கொண்ட மக்களைக் குறித்த கவலை இல்லாமல் சோம்பலாகவும் கரிசனை இன்றியும் கவலையின்றியும் தன்னுடைய நேரத்தையெல்லாம் அலுவலகத்திலேயே செலவிடுகின்றவராகவும் இருந்தால் இந்தப் பணியைச் செய்ய முடியாது. மேலும் அவர் வாக்கு வாதம் பண்ணுகிறவராகவும் காரியங்களைக் குறித்து தேவையில்லாமல் பேசுகிறவராகவும் தான் சந்திப்பவர்களுடன் எல்லாம் சண்டையிடுகிற வராகவும் இருந்தால் இந்தப்பணியைச் செய்ய முடியாது. மாறாக அவர் ஜனங்கள் மீது அன்புள்ளவராகவும் தன்னுடைய பணியை செய்வதில் சந்தோஷமுள்ளவராகவும் ஆத்துமாக்களைச் சந்தித்து போதித்து அவர்களை கிறிஸ்துவினிடத்தில் திருப்பவேண்டும் அவர் வெற்றியுள்ள வராக இருக்க விரும்பினால் இருக்கலாம். அவர் தன்னுடைய பணியை சரியாகச் செய்வாரென்றால் கர்த்தர்அவரை ஆசீர்வதிப்பார். அவருடைய முயற்சிகள் ஆத்துமாக்களை கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தும்.


## HOME OF LOVE

அன்பு தேவமக்களே,

தாய் தந்தை அற்ற மற்றும் ஏழை சிறுவர், சிறுமிகளையும் கைவிடப்பட்ட தாய்மார்களையும் சேர்த்துக்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம். உங்களுடைய புகைப் படத்துடன் மே 20 தேதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

கல்வி, மற்றும் உணவு உடை இலவசமாக வழங்கப்படும். மிக குறைந்த இடங்களே உள்ளன.

Contact: Principal, Home of Love, Orphanage
John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378

பெண்கள் பகுதி

# பரவசம் என்பது என்ன?
# *What Is Ecstasy?*

*-Betty*

**பரவசம் என்பது என்ன?**



இது தேவனோடுள்ள சமாதானத்திலும் பாதுகாப்பிலும் இருக்கின்ற ஒன்று, அகங்காரத்தில் அல்லது பெருமையில், ஒருவரிலுள்ள நம்பிக்கையில் அல்ல, மாறாக சாதாரணமாக தேவனில் பத்திரப்பட்டுள்ள ஒன்று.


இது நெடுங்காலமாக அவரோடே கூட வாழ்ந்திருக்கிற ஒன்று என நீ அறிவாய். அவருடைய பிரபஞ்சத்தை, அனுபவத்தின் மூலமாய் மட்டுமல்ல மாறாக அவருடைய வழிகள் உன்னுடையவைகளாவும் இப்போது அவைகள் உனக்கு இயல்பானவையாகவும் மாறியிருக்கின்றதினால்.

இது அவருடைய புத்தகத்திலுள்ள அவருடைய நினைவுகளை ஈர்க்கும் நிலையை ஆராய்ந்திருக்கின்ற ஒன்று என நீ உன்னுடைய விசுவாசத்தின் அசைக்க முடியாத உண்மையினையும், எந்த ஒரு நபரின் வார்த்தைகள் அல்லது கிரியைகள் இதைத் தொடமுடியாது என்பதையும் அறிவாய்.

இது ஒரு குறிப்பிட்ட சவால். புதியவையாயிருந்த போதிலும் கூட அதை எவ்வாறு சமாளிக்கலாம் என நீ அறிந்திருக்கிற அதிகமான துயரத்தையும் வேதனையையும் சகித்துக்கொண்டிருப்பதாகும். தேவனிடத்தில் கிட்டிச் சேர்வாய் என கடந்த நடக்கையிலிருந்து நீ அறிவாய், ஒரு வேளை புரிந்து கொள்ளுவதில், ஒரு வேளை குழப்பத்தில், ஆனால் அவர் உன்னை விழாமல் தாங்கி எல்லாவற்றையும் சரி செய்வார் என நீ அறிந்து கிட்டிச் சேருவாய், கெட்டியாய் பிடிப்பாய், மேலும் காத்திருப்பாய்.

இது கீழ்ப்படிதல் ஒரு கடமையாய் இருந்த போது அல்லது ஒரு செயல் பயனளிக்கப்பட்ட போது. சில நேரங்களில் சவாலுக்கிடையில் உறவு நிச்சயமில்லாமல் காணப்பட்ட போதும் மற்ற நேரங்களில் இது உன்னுடைய ஆத்துமாவில் வெறுமையாகக் காணப்பட்ட போதும் ஆவிக்குரிய குழந்தைப் பருவத்தின் சகாப்தம் என கடந்து சென்று கொண்டிருக்கின்ற ஒன்றாகும். இது முடிவிலே அவருடைய குழந்தையாய் மாற்றமடைந்திருக்கின்றது, பெயரில் அல்ல, செய்து நிறைவேற்ற செய்வதில், ஆனால் உன்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு அணுவிலும் இவ்வாறு நிலைத்திருக்கிற அவருடைய பிரசன்னத்தின் தொடரில்லா விஷயம் தெரிந்த நிலை ஒரு போதும் கற்பனை செய்யவும் கூடாததாயிருக்கிறது.

இது அறிந்திருக்கின்ற ஒன்று, வேதாகமத்திலுள்ள வசனங்களை வாசிப்பதிலிருந்து அல்ல, மாறாக உன் ஆத்துமாவின் உள்ளுணர்வு களிலிருந்து அதாவது, "மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்பதாகும் (ரோமர்.8:38,39).




*காலங்களின் பரம இரகசியம்*

***The Mystery of The Ages***

நித்தியகாலங்களின் பரம இரகசியம்
—சரியான சமயத்தில் திருப்புமுனை
அறியவில்லை எக்காளங்களின் முன்னறிவிப்பினை,
அடையாளங்கண்டு கொள்ளப்படவில்லை பிலாத்துவினால்,
நியாயாசனத்தின் பிரபுக்களினால்,
அல்லது கலகக்காரர் கூட்டத்தினால்,
பாவத்தினாலும் தண்டனையினாலும்
தலைகுனிந்தவராய்,
இயேசு மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டு ஜீவனை விட்டார்.
யார் இருந்தார்கள்
அச்சமயத்திலே
இரட்சிப்பின் கிரயம் செலுத்தப்பட்டபோது?
கண்ணீர் விட்டுக் கொண்டு, நின்றனர் அவருடையதாய்,
யோவான்,
விசுவாசித்த ஒரு சில ஸ்திரீகள்
மற்றும் அவிசுவாசத்தில் பரியாசம் செய்தவர்கள்,
ஆனால் இல்லை
அவரை சுற்றி வந்து கொண்டிருந்த மனிதர்கள்
அவர் போதித்து பூமியை குணப்படுத்தினதை
அவருடைய சகோதரர்கள் அல்லது சகோதரிகள்
அறிந்து கொள்ளும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை
காலம் கடந்தே அவர்கள் ஏற்றுக்கொண்டனர் அவரை,
உயிர்த்தெழுந்த கர்த்தரை,
எல்லாவற்றிற்கும் மேலான தேவனை,
மனிதனுடைய இரட்சிப்பின் பரிசுத்த ஆட்டுக்குட்டியை,
மகிமையிலே நம்மெல்லாருடைய நியாயாதிபதியை;
காலம் கடந்தே அவர்கள் அறிந்தனர் ஆழமாய்.
—பிரசங்கம் செய் பூமியின் தூரதீவுகளுக்கு—
ஏனென்றால் அந்த குழந்தை முன்னணையில் கிடத்தப்பட்டது
—ஏனென்றால் அந்த மனுஷன் கல்லறையில் கிடத்தப்பட்டார்,
பாவிகளின் இதயங்களில் பிறக்க வேண்டும்,
பாவத்தில் மரித்திருந்தான்
இப்போது பாவத்திற்கு மரித்தவனாய்
மறுபடியும் பிறந்து அவரில் வாழ்கின்றான்
நித்திய நித்தியமாய்.



*-Betty*



# கொடுங்கள் — Give

-J.Glory Arjunan

கிறிஸ்துவை தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்ட அன்பு சகோதரிகளே, "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை" *(அப்.20:35)* நாமெல்லோரும் நன்கு அறிவோம். இன்று கிறிஸ்தவ சகோதரிகள் கூட ஆசீர்வதிக் கப்படாமல் எப்போது பார்த்தாலும் கடன், கஷ்டம் என்று அங்கலாயித்துக் கொண்டிருப் பதைக் காண்கிறோம். ஏன் இந்த அவலநிலை? "கர்த்தரை தெய்வமாகக் கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது" என்ற தேவவசனம் பொய்யா யிற்றோ! நிச்சயமாக இல்லை. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என கர்த்தர் சொல்லியிருக்கிறார். அப்படியானால் ஆசீர்வாதக் குறைச்சலுக்குக் காரணம் தான் என்ன? நாமே காரணம்! ஆம். வேதம் கூறுகிறது " கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" *(லூக்.6:38)*. நமதாண்டவர். ஆனபடியால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட, கொடுக்கிறவர்களாகமாற வேண்டும்.

அன்பு சகோதரியே, கொடுக்கின்ற பழக்கம் உங்களுக்கு உண்டா? அநேகர் கொடுக்கின்ற விஷயத்தில் மிகவும் பின்னிலையில் தான் இருக்கின்றனர். கிறிஸ்துவின் நாம மகிமைக்கென்று கொடுக்கும் போது கிடைக்கின்ற ஆசீர்வாதத்திற்கு அளவே இல்லை. இன்றைய நாட்களில் அநேகர் தங்களுக்கு ஏதாவது கிடைக்குமென்றே கிறிஸ்தவர்களாக மாறுகின்றனர். இது தவறான எண்ணம். தேவன் கிறிஸ்துவையே நமக்கென்று கொடுத்துவிட்டாரே, அப்படியிருக்கும் போது நாம் தேவபணிக்கென்று, தேவ நாம மகிமைக்கென்று கொடுப்போம், அப்பொழுது நமக்கும் கொடுக்கப்படும். ஆனால் நாம் செய்யவேண்டியது என்ன? கொடுக்க வேண்டும். அதுவும் நமக்கு அதிகம் கொடுக்கப்படத்தக்க அளவில் கொடுக்க வேண்டும். வேதாகமத்தில் இவ்விதமாக கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அநேகர்.

அன்று கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவை சாறிபாத் என்ற ஊரிலிருந்த ஒரு விதவை அவனுக்கு உணவு கொடுத்து பராமரித்தாள். இந்த விதவையின் நிலை என்ன தெரியுமா? பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அதை

அவளும் அவளது குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். ஆனால் தேவ ஊழியன் எலியாவோ, அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் தண்ணீரும் கொஞ்சம் அப்பமும் உன்கையிலே எனக்குக் கொண்டுவா என்றான். அவளோ, தானும் தன் குமாரனும் சாப்பிட்டுச் செத்துபோக தங்களுக்கு ஆயத்தப்படுத்துகிறதற்கு விறகு பொறுக்குகிறேன் என்றாள். ஆனால் எலியா அவளைப் பார்த்து: "பயப்படாதே, நீ போய் என் வார்த்தையின் படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப்பண்ணி என்னிடத்தில் கொண்டு வா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை" *(2ராஜா17:9-16)*. பாருங்கள் இந்த விதவை முதலாவது தேவ ஊழியனுக்குக் கொடுத்தாள், அப்பொழுது இவளுக்கும் இவள் வீட்டாருக்கும் குறைவில்லாமல் கொடுக்கப்பட்டது.

இந்த விதவையைப்போலவே ஒரு பையன் தன்னிடத்திலிருந்த ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்து ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்கள் ஆசீர்வதிக்கப்பட காரணமானான் *(யோவா.6:9)*. பொதுவாக சிறுபிள்ளைகள் தங்களிடமுள்ள எதையும் மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்பமாட்டார்கள். ஆனால் இந்த பையனோ கொடுக்க அறிந்தவனாயிருந்தான். எனவே ஆசீர்வாதத்திற்குக் காரணமானான். இவ்வாறு நாமும் கொடுக்கும் போது நாம் மட்டுமல்ல மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்பட காரணமாகிறோம்.

நம்மில் சிலர் இவ்விதமாகக் கொடுப்பதில்லை. கர்த்தர் என் கஷ்டத்தைப் போக்கட்டும், என் கடன் பிரச்சனையை நீக்கட்டும் எனக்கே வழியில்லாமலிருக்கும் போது கர்த்தருக்கடுத்த காரியத்திற்குக் கொடுக்கவோ, உதவிசெய்யவோ முடியாது என்பர். வேதாகமத்தில் மாற்கு12:42-ல் கூறப்பட்டுள்ள இரண்டு காசு காணிக்கையாக போட்ட அந்த ஏழை விதவையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்! அவள் காணிக்கையாகப் போட்டது இரண்டு காசு என்றாலும் தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். இவளைப் பார்த்த இயேசு "....இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள்" என்றார். அன்பு சகோதரியே உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

வேறுசிலர் நாம் ஏதோ நிரந்தரமாக இப் பூமியில் இருக்கப்போவதைப்போல் எண்ணி பணத்துக்கு மேல் பணத்தையும் சொத்துக்குமேல் சொத்தையும் தமக்காக சேமித்து மற்றவர்களுக்குக் கொடுக்க கொஞ்சங்கூட விரும்பமாட்டார்கள். உன்னோடிருக்கும் ஒரு ஏழை சகோதரியை, அல்லது குறைச்சலுள்ள ஒரு சகோதரியை குறித்து என்றாவது சிந்தித்ததுண்டா? "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி.19:17). கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நீங்கள் கொடுத்ததை கர்த்தர் உங்களுக்குத் திரும்பக்கொடுப்பார் என்பதை மறக்கவேண்டாம். மேலும் நமக்கும் நம்முடைய குடும்பத்திற்கும் வேண்டுமென எண்ணி சுயநலமாய் வாழாதீர்கள். கொடுப்பதில் கருமித்தனமாயிராதீர்கள். தாராளமாய் கொடுத்துதவினால் நமக்கு இல்லாமல் போய்விடும் என நினைக்காதீர்கள். "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதி.11:24,25) என வேதம் கூறுகிறது. இறைக்கிற கிணறுதான் ஊறும்.

நாங்கள் ஒருமுறை கர்த்தருடைய வசனத்தை விதைக்கும்பொருட்டு சிலருக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்க நினைத்தோம். ஆப்பொழுது எங்களிடம் வேதாகமம் வாங்குவதற்கான பணமில்லை, ஜெபித்தோம். பிறகு எங்களிடமிருந்த கொஞ்சப் பணத்தை முதலாவது தேவநாம மகிமைக்கென்று கொடுத்து சில வேதாகமம் மட்டும் வாங்குவோம் என நினைத்து முதலில் 20 வேதாகமம் மட்டும் வாங்கி சிலருக்கு கொடுக்க ஆரம்பித்தோம். பாருங்கள், என்ன ஆச்சரியம்! எதிர்பாரத விதமாக 20 வேதாகமமே வாங்கின எங்களுக்கு 312 வேதாகமங்கள் வாங்கத்தக்க அளவில் கொடுக்கப்பட்டது. அன்பு சகோதரியே, வசனம் ஒருபோதும் பொய்யாகாது. நம்மிடமுள்ள கொஞ்சத்தை உற்சாகமாய் கொடுக்கும் போது, நமக்கு அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி அளவில்லாமல் கொடுக்கப்படுகிறது. ஆகவே நீங்கள் முதலாவது கொடுக்க ஆரம்பியுங்கள். உலகத்தார் எதிர்பார்ப்பது போல மற்றவர்களை எதிர்பார்க்காதீர்கள். உங்களிடத்திலுள்ளதைக் கொடுங்கள். உங்களுக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசுவின் நாம மகிமைக்கு உங்களுடையதோடுகூட உங்களையும் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்துவிழும்படி கொடுக்கப்படும். "கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக் கடவன் என்றார். பின்னும் அவர்(இயேசு) அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு

அதிகம் கொடுக்கப்படும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், இல்லாதவனெவனோஅவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் என்றார்" (மாற்.4:24,25). அன்பு சகோதரிகளே, இல்லை என்று சொல்லாமல் தம்மிடமிருந்த ஒரு பிடி மாவு, கொஞ்சம் எண்ணெயை கொடுத்த விதவையைப் போல, தம்மிடமிருந்த சில அப்பம், மீனைக் கொடுத்த பையனைப் போல, தம்மிடமிருந்த இரண்டு காசைப் போட்ட விதவையைப் போல, நம்மிடமிருக்கும் கொஞ்சத்தை உற்சாகமாய் கர்த்தருடைய பணிக்கெனக் கொடுத்து, ஆசீர்வதிக்கப் படுவோம். கர்த்தர் தாமே கொடுக்கும்படி உங்கள் இருதயங்களைப் பக்குவப்படுத்துவாராக! வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

### யோர்தான் நதி

எர்மோன் மலையடிவாரத்தில் உற்பத்தியாகி கலிலேயாக்கடல் சென்று அங்கிருந்து தெற்கு திசையில் பாய்ந்து சவக்கடலில் சேருகிறது. இந்நதியின் நீளம் 320 கி.மீ. கடல் மட்டத்திலிருந்து கீழே 1300 அடி தாழ்வாக இது ஓடுகிறது. 100 முதல் 200 அடி அகலம் உள்ள சிறிய நதிதான். ஆனாலும் இது வேதாகமத்தில் அதிகமாகப் பேசப்படும் நதி. இந்த நதியில் தான் இயேசு ஞானஸ்நானம் பெற்றார். இஸ்ரவேல் நாட்டின் கீழ் எல்லையாக இது அமைந்துள்ளது. இந்நதிக்கு கிழக்கே ஜோர்டான் நாடு உள்ளது.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் நடைபெற்ற 30வது கிறிஸ்துவின் வசனம் வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்

கிறிஸ்துவின் வசனம்



2008

"கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்" 2கொரிந்தியர் 4:10

# பொறுமையாயிருங்கள்

*-Mercy Prabhakaran*



பிரியமான சகோதரிகளே "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமை யானது பூரண கிரியை செய்யக்கடவது" (யாக்.1:4). ஆம்! சகோதரிகளே, வானத்தையும் பூமியையும் நிரப்புகிற தேவன் நமது குறைகளை நிறைவாக்க முடியாதா? முடியும். கொஞ்சம் சிந்தித்து பாருங்கள். தேவன் நமக்கு கொடுத்திருக்கிற சுகத்திற்காக சந்தோஷப்படுங்கள். மனப்பூர்வமாக ஸ்தோத்திரம் செலுத்துங்கள். பூரணமாகவும், நிறைவாகவும் எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்பட "பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது என யாக்.1: 4- வசனம் கூறுகிறது. இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகள் கூட உடனே ஆவிக்குரியகாரியம், தொழில், திருமணகாரியம் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். "ஆரம்பத்திலே துரிதமாக கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது" (நீதி.20:21)

சகோதரிகளே, நமக்கு துரிதமாகக் கிடைக்கிற நன்மைகள் யாவும் சீக்கிரமாகவே நம்மைவிட்டு போய்விடும். காத்திருக்காமல் கஷ்டப்படாமல் நன்மைகள் வந்தால் நமக்கு பெருமையும், அகந்தையும், மேட்டிமையும் வந்துவிடும் என்பதை மறந்து போகாதீர்கள். கிறிஸ்துவின் வருகைகூட தாமதமாக இருக்கிறது "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தை குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என (2பேது.3:9-ல் வாசிக்கிறோம். இந்த உலகத்தில் எவ்வளவு அக்கிரமங்கள், பாவங்கள், மீறுதல்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவ காரியங்களில் எழுப்புதலாக இருந்தவர்கள் கூட அநேகர் இன்றைக்கு பின்மாற்றமாகி விட்டார்கள். ஆனாலும் தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கிறார். ஏனென்றால் எல்லாரும் மனந்திரும்பி நித்திய ஜீவனை அடையவேண்டும். அன்பான சகோதரிகளே, நாம் எந்த காரியத்திலும் அவசரப்படாமல் "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி.12:1). எந்த காரியத்திலும் பொறுமை யோடிருக்கும்போது பூரணத்தையும், நிறைவையும், சிறந்ததையும் பெற்றுக்கொள்வோம்.

"நீங்கள் பொறுமையாயிருந்தால் எல்லா காரியத்திலும் நிறைவை பெறுவீர்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்கள் என்கிறோமே" என யோபுவின் பொறுமையை நமக்கு காட்டுகிறார் (யாக்.5:11). போட்டி போட்டுக்கொண்டு தொழில் செய்கிற இந்த உலகத்தில் நான் எப்படி குடும்பம் நடத்துவேன். என் கணவனால் என் பிள்ளையினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று கலங்குகிறீர்ககளா? பொறுமையாயிருங்கள். "அழிந்து போகிற பொன் அக்கியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1பேது.1:8).

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று பேருடைய விசுவாசம் சோதிக்கப்பட்டது. நேபுகாத்நேச்சார் என்ற இராஜா அவன் நிறுத்தின ஒரு பொன்சிலையை வணங்கும்படி மக்களுக்கு கட்டளையிட்டான். பாபிலோன் தேசத்தில் உள்ள மனிதர்கள் எல்லாம் அந்த சிலையை வணங்கினார்கள். ஆனால் இந்த மூன்று யூதர்களும் இராஜாவின் கட்டளையை மீறி சிலையை வணங்கமாட்டோம் என்று உறுதியாக இருந்தார்கள். சிலையை வணங்காவிட்டால் ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட அக்கினியில் போடப்படுவோம் என்பதையும் இந்த மூன்று வாலிபர்கள் அறிந்திருந்தார்கள். இந்த விசுவாச பரீட்சையில் இராஜாவின் கட்டளையை தள்ளி தண்டனையையும் பொருட்படுத்தாமல் உறுதியாக இருந்தார்கள். இதனால் அக்கினி இவர்களை ஒன்றும் சேதப்படுத்தவில்லை. "இதோ நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவில் உலாவுகிறதைக் காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை (தானி.3:25) என்று ராஜா சொன்னான். விசுவாசம் சோதிக்கப்படும்போது பொறுமையாயிருக்கவேண்டும். விசுவாச பரீட்சைக்கு பின்பு இராஜா, சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களை பாபிலோன் தேசத்தில் உயர்த்தினான் (தானி.3:30). "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்" கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் (சங்.34:19). நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும்போது நாம் பொறுமையாக இருந்தால் கர்த்தரே எல்லா காரியத்திலும் நம்மை விடுவித்து பூரணமான நன்மையையும், நிறைவான ஆசீர்வாதத்தையும் கட்டளையிடுவார். "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன் (யாக்.5:13). ஜெபத்திலே உறுதியாய் நிலைத்திருந்து, உபத்திரவமான சமயத்தில் பொறுமையை கடைபிடிக்கவேண்டும். இப்படிப்பட்ட வேளையில் பிசாசு கொண்டுவருகிற காரியங்களை எதிர்த்துப் போராடவேண்டும்.

"கர்த்தர் உன்னை எல்லாத்தீங்குக்கும் விலக்கி காப்பார்" (சங்.121:7) என்ற வசனத்தின்படி தேவன் நம்மை பாதுகாத்து வழிநடத்துவாராக! ஆமென்.

# விலகி ஓட வேண்டும்

*P.Balakrishnan*

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் கிறிஸ்துவுக்குள் இன்னும் இரட்சிக்கப்படாத, இதை வாசித்துக் கொண்டிருக்கிற உங்களுக்கும், இதை கேட்டுக் கொண்டிருக்கிற உங்களுக்கும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய வாழ்க்கையில் நாட்கள் கடந்து கொண்டிருக்கிறது. பாவத்திலிருந்து பிரிந்து, ஆவிக்குரிய வாழ்க்கையில் பல போராட்டங்களை கடந்து தேவனுடைய நாமத்தினிமித்தம் அநுதினமும் ஓட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஒரு குழந்தை பிறந்து தவழ்ந்து தன்னுடைய வாலிப பருவத்தை அடையும் வரைக்கும் பல போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. இன்றைய கால கட்டத்திலே, நாம் எந்த நிலையில் நிலைத்திருக்கிறோம், எங்கே இருக்கிறோம் என்று நினைத்துக் கூட பார்க்க முடியாத சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவன் படைத்த அனைத்து படைப்புகளிலும் விசேஷித்தவனாய் மனுஷன் திகழுகிறான். நாம் பிறந்தது முதல் இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிற நேரம் வரை பல ஆண்டுகளையும், மாதங்களையும், நாட்களையும், நிமிஷங்களையும் கடந்து வந்திருக்கிறோம். வருடங்கள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன. அன்றாட வாழ்க்கையில் நம்முடைய கடமைகளை செய்துமுடிக்க பல மணி நேரங்கள் ஓடிவிடுகின்றன. ஒரு நிமிடமாவது தேவனுக்கடுத்த காரியங்களை சிந்திக்க இடங்கொடாது போகிறார்கள். எத்தனையோ வாலிப பிள்ளைகள் மாயைகளை நம்பி மாய்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் இதை அநுதின ஜீவியத்தில் பார்க்கமுடிகிறது. தேவனுடைய பிள்ளைகளாக தெரிந்து கொள்ளப்பட்ட நாம் ஓடவேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. ஓட்டப் பந்தையத்தில் ஓடும் வாலிபர்களை நாம் பார்க்கிறோம். நாமும் கூட ஏதாவது ஒரு பரிசு பொருளுக்காக ஓடியிருப்போம். அதைபெற்றுக்கெள்ள வேண்டுமென்றால் நம் சிந்தனையை மற்றெங்கும் சிதற விடாமல், ஒரே நோக்கத்தோடே எல்லாவற்றையும் உதறி தள்ளிவிட்டு ஓடவேண்டும். அதைப்போல தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நாம் உலகத்தில் உள்ள அசுத்தங்களுக்கு விலகி ஓடவேண்டியது அவசியமாயிருக்கிறது.

**1. விக்கிரக ஆராதனையை விட்டு விலகி ஓடவேண்டும்:**

*1கொரி.10:14*-ல் நாம் பார்க்கும்போது விக்கிரகஆராதனைக்கு விலகிஓட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் கொரிந்து சபைக்கு தேவனுடைய வார்த்தைகள் வெளிப்படுத்தப்படுகிறது. ஏனென்றால் விக்கிரக

ஆராதனையைப் பின்பற்றுபவர்கள் அநுதினமும் தங்களுக்குத் தாங்களே குழியை வெட்டி விழுந்து அழிந்து போகிறார்கள். ஆகையால் வாலிப சகோதர சகோதரிகளே உங்கள் உடன் பிறந்த சகோதரனாவது சகோதரியாவது உறவினர்களாவது நண்பர்களாவது நயங்காட்டினால் நீங்கள் அவர்களை விட்டு விலகி ஓடவேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. 1கொரி.10:7-ல் சிலர் விக்கிரக ஆராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள். ஏனென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பாவத்திலிருந்து மீட்கப்பட்ட பரிசுத்த பிள்ளைகளாகிய நாம் அவர்களை பின்பற்றக்கூடாது (1கொரி.8:10,11). தேவனால் நாம் எச்சரிக்கப்பட்டும் கீழ்ப்படியாமல் போனால் தேவனுடைய ஆக்கினைக்குள்ளாக கடைசி நாளிலே நியாயந் தீர்க்கப்படுவோம். ஏனென்றால் கழுவப்பட்ட பன்றி மீண்டும் தான் இருந்த பழைய இடத்திற்கே சென்று விடுவது போல இப்படிப்பட்ட காரியத்தில் பங்கு கொண்டால் கிறிஸ்துவின் பாடுகள் வீணாய் போகுமல்லவா....... உன்னை பார்த்து உன்னில் அன்பு செலுத்தும் உன் பலவீனமுள்ள சகோதரன் விழுந்துபோவான் அல்லவா? ஆகையால் விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடவேண்டியது மிக அவசியம்.

"நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதை செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே"(1கொரி.12:2) என்று பவுல் கூறுகிறான். நாம் விக்கிரகங்களை விட்டு மனந்திரும்பியிருக்கிறோம் (1தெச.1:9,10). ஆதலால் விக்கிரகங்களை விட்டு உங்களை காத்துக்கொள்ளுங்கள். "விக்கிரகத்திற்கும் தேவனுடைய ஆலயத்திற்கும் சம்பந்தம் ஏது?"(1கொரி.6:16,17) மேலும் விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகி இருக்கும்படி பவுல் கூறுகிறதை (அப்.15:20) வாசிக்கின்றோம். ஆகையால் பரிசுத்த அழைப்புக்குப் பாத்திரவான்களான நாம் விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓட வேண்டியது மிகவும் அவசியம்.

**ஜெபியுங்கள்**

- ☆ இம்மாதம் பல தடைகளுக்கு மத்தில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 30 –வது கருத்தரங்கு சிறப்புடன் நடைபெற்றதிற்காக...
- ☆ விடுமுறை நாட்களில் குழந்தைகள் பாதுகாக்கப்பட...
- ☆ 'கிறிஸ்துவின் வசனம்' டிவி மற்றும் ரேடியோ நிகழ்ச்சிகளுக்காக ...
- ☆ திக்கற்ற பிள்ளைகளுக்காக, விதவைகளுக்காக...
- ☆ கர்த்தருடைய சபை வளர்ச்சிக்காக...



**2. வேசித்தனத்திற்கு விலகி ஓடவேண்டும்:**

நாம் அன்றாட வாழ்க்கையிலே பேருந்தில் பயணம் செய்யும் போது ஒரு சில மனிதருடைய போதனைகளை பார்க்கிறோம். விசேஷமாக அது இளைஞர்களுக்கென்றே எழுதப்பட்டிருக்கிறது. 'சாதிக்கவேண்டிய வயதில் சபலம் எதற்கு?' வேத அறிவும் தேவனைப்பற்றும் பயமும் இல்லாத உலகத்தாரே இவ்வாறு எச்சரிக்கும்போது ஆவிக்குரிய ரீதியில் நம்மை அழைத்த தேவன் சகோதர சகோதரிகளை வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள் (1கொரி.6:18) என எச்சரிக்கிறார். ஏனென்றால் மனுஷன் செய்கிற எந்த பாவமும் சரீரத்திற்கு புறம்பாக (வெளியே) இருக்கிறது. வேசித்தனம் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய் பாவம் செய்கிறான். ஆதலால் தான் வேசித்தனம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக தேவன் திருமணத்தை ஏற்படுத்தினார். வேசித்தனம் இராதபடிக்கு திருமணம் செய்யவேண்டும் என்று பவுல் எச்சரிக்கிறார் ( 1கொரி7:12). பழையஏற்பாட்டில் தேவனுக்குப் பயந்து நடந்த யோசேப்பைப் பற்றி பார்க்கவேண்டியது அவசியமாயிருக்கிறது (ஆதி59:1-12) யோசேப்பு தன் வாலிப வயதில் தனக்கு ஏற்பட்ட பாவ வலையில் சிக்கிக் கொள்ளாமல் அதை (வேசித்தனத்தை) உதறி தள்ளிவிட்டு ஓடினான். ஆகையால் நாம் இந்த வாலிப வயதிலே சிம்சோனைப்போல இராமல் யோசேப்பைபோல வேசித்தனத்தை விட்டு விலகி ஓடவேண்டும். ஆகையால் வாலிப சகோதர சகோதரிகளே வேசித்தனத்திற்கு இடங்கொடுத்தீர்களானால் தேவனுடைய ராஜ்யத்திலே பிரவேசிக்க முடியாமல் வீணாய் போய்விடுவீர்கள். யோசேப்பு வேசித்தனத்திற்கு விலகி ஓடியதால் அவனுக்கு தேவன் ஒரு அழகான மனைவியை கொடுத்து எகிப்து தேசம் முழுவதுக்கும் அவனை அதிகாரியாக மாற்றினார் (ஆதி.41:42-45). ஆகையால் விவாகமானது யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது (எபி.13:4). எனவே, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றும்படியாக நாம் வேசித்தனத்திற்கு விலகி ஓடவேண்டும்.

**3. பண ஆசைக்கு விலகி ஓடவேண்டும்:**

பணஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது(1தீமோ.6:10). எனவே பண ஆசைக்கு விலகி ஓடவேண்டியது மிகவும் அவசியமானது. ஆனால் உலகத்தார், 'பணம் பாதாளம் வரைக்கும்பாயும்' என்றும் 'பணத்தைக் கண்டால் பிணம் கூட வாயைத்திறக்கும்' என்றும் சொல்வது உண்டு. நம்மை உண்டாக்கிய தேவன் நமக்கு வேத வசனங்கள் மூலமாக போதிக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது "..... கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும்......"(2தீமோ3:1-5) இருப்பார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும்

சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று எழுதுகிறார். ஏனென்றால் பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை என்று சாலமோன்ஞானி பண ஆசையைக் குறித்து கூறுகிறான்(பிர.5:10). பொருள் பெருகினால், அதைத் திண்கிறவர்களும் பெருகுவார்கள். அதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை (பிர.6:11). பண ஆசை இல்லாதவர்களாயிருக்க வேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறோம் (எபி.13:5).

**4. பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகி ஓடவேண்டும்:**

இப்படிப்பட்ட இச்சைகளுக்கு விலகி ஓடவேண்டும் என்று பவுல் மறுபடியும் எச்சரித்து சொல்கிறார். ஆகையால் இப்படிப்பட்ட பாவத்தை விட்டு விலகி ஓடி விலையேறப்பெற்ற பொக்கிஷத்தை பெற்றுக்கொள்ளும்படியாக கலாத்தியர்5:24-ன்படி நம் இச்சைகளை சிலுவையில் அறைந்திருக்க வேண்டும். ஏனென்றால் கலாத்தியர்5:25-ன்படி நாம் ஆவியினாலே பிழைத்திருக்கிறபடியால் ஆவிக்கேற்ற படி நடந்து ஆவியின் கனிகளை (கலா.5:22,23) கொடுத்து, பாவத்திற்கு விலகி ஓடி நற்சாட்சியுள்ளவர்களாக வாழ பிரயாசப்படுவோம். நாம் உலகத்திற்கு முன்பாக வெளிச்சத்தில் வழி நடத்திச் செல்லும் வழிகாட்டியாக இருந்து தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவோமாக!

பாவத்திற்கு விலகி ஓடி பரம பிதாவின் சித்தத்தின் படி செய்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோமாக! தேவன் தாமே நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

### நடப்புச் செய்திகள்

- ☆ *உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கையை டென்மார்க் மக்கள் வாழ்கின்றனர்.*
- ☆ *இந்தியாவில் இருந்து லண்டனுக்கு ரயிலில் செல்லும் வசதி இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்படுகிறது. மொத்தம் 11,000 கி.மீ தூரத்தை 23 நாளில் கடக்கலாம்.*
- ☆ *திண்டுக்கல் மாவட்டத்தில் 14 இடங்களில் தானியங்கி வானிலை ஆய்வு நிலையம் அமைக்க ரூ.94.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*
- ☆ *மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பவளப் பாறைகளின் வளர்ச்சி 4.5 சதவீதம் அதிகரித்துள்ளது ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.*
- ☆ *உலகிலேயே முதன்முறையாக 10 செயற்கைக்கோள்களை பி.எஸ்.எல்.வி.-சி9 ராக்கெட் மூலம் இஸ்ரோ அனுப்பி உலகசாதனை படைத்துள்ளது.*

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -9

## ஆசாரியர்கள்: தேவன் மெல்கிசேதேக்கு, முற்பிதாக்கள், யூதஆசாரியர்கள், இயேசுகிறிஸ்து, மற்றும் நாம்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



கோஹென் (KOHAN) என்ற எபிரெய வார்த்தை - கோஆன் (KOHAN) *நிற்பவன்"* என்ற சொல்லிலிருந்து வந்தது. *"கர்த்தருடைய சந்நிதியிலே 'நின்று' அவருக்கு ஆராதனை செய்வதற்கும் அவர் நாமத்தைக் கொண்டு ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தர் "லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுததார்" உபா.10:8, எபி.10:11.* தேவனைவிட்டு விலகிச்சென்ற பாவமனித இனத்தை திரும்பவும் அன்பின் ஆண்டவரிடம் அழைத்துச் செல்லவும், மனிதனுக்கும் தேவனுக்குமிடையே மத்தியஸ்தராக திருப்பணி ஆற்றக்கூடியவனே **ஆசாரியன்.** *"நீங்கள் (இஸ்ரவேலர்கள்) என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்" எண்.16:9; உபா.10:8.*

*ஏதேனில் (இன்பம்)* தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாத தேவ சாயலாய் உண்டாக்கப்பட்ட ஆதாம், ஏவாள் தேவனுக்கு கீழ்ப்படியாமையினால் பாவிகளானபோது, அவர்களின் நிர்வாணத்தை (பாவம்) மூடிட (சங்.32:1) பலி செலுத்தப்படவேண்டும். (பாவத்தை கழுவி, நீக்கிட வேண்டுமாயின் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே சகல பாவங்களையும் 'நீக்கும்' நம்மை சுத்திகரிக்கும் (1யோவா.1:7). *முதல் மனிதனின் நிர்வாணத்தை மறைக்க கர்த்தர் தோல் உடைகளை அவர்களுக்கு உடுத்தினார்" ஆதி.3:21.* அவர்களின் பாவங்கள் மூடப்பட பலி செலுத்தப்பட்டதுமின்றி தேவனே அவர்களுக்கு ஆசாரியரானார். *"இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பில்லை" எபி.9:32. உங்கள் ஆத்துமாக்களுக்குப் பாவ நிவர்த்தி செய்யும்படிக்குப் பாவ நிவர்த்தி செய்கிறது இரத்தமே" (லேவி.17:11).* தேவ கட்டளையின்படியும் தன் பெற்றோர்களின் போதனையின்படியும் தேவனை ஆராதிக்கவும் காணிக்கை செலுத்தவும், தேவவழியை அறிந்திருந்த ஆபேல் (மூச்சு, மூச்சாட்டம்) *கொழுமையானவைகளை (Firstlings) தேவனுக்கு பிரியமான, அங்கீகரிக்கும் காணிக்கை செலுத்தினான்" ஆதி.4:4; எபி.10:4.* தேவன் விரும்புவது, தலை ஈற்றுகள், முதற்கனிகள். மேலும் அன்னாளைப்போல முதல் ஆண்மகனை அவள் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அளித்ததால், தேவன் அவளுக்கு மேலும் 3 மகன்களையும் இரண்டு மகள்களையும் கொடுத்து (1சாமுவேல் 2:21) ஆசீர்வதிக்கப்பட்டாள். ஆனால் காயீன் (உடைமையாய்ப்பெற்றிடு (Possessed) தேவ வழியை தள்ளி தன் சொந்தவழியாகிய "காயீனுடைய வழியிலே" யூதா 11. அவன் தீய செய்கையை கண்டிக்க எபிரெய எழுத்தாளன்... ஆபேல்

காயீனுடைய பலியிலும் (காணிக்கையிலும்) மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் எபி.11:4. அன்பின் சீடன் யோவான் அவனை "தன் சகோதரனைக் (முதற்கொலை) கொலை செய்த பொல்லாங்கன் காயீன் 1யோவா.3:11 என்றார். இன்றைக்கும் அனேகர் தேவனை ஆராதிக்க வேதாகமம் கூறும் தேவ வழியை விட்டு **காயீனுடைய** (மனிதர் வீணாய் போதிக்கும்) வழியை பின்பற்றிவருகிறார்கள்.

வேதாகமத்தில் முதன் முதலாக எழுதப்பட்டிருக்கும் ஆசாரியர்: **மெல்கிசேதேக்கு** (நீதியின் இராஜா) இவர் சாலேமின் (சமாதானத்தின்) எருசலேமின் (சமாதானம்) இராஜா இவர் உன்னதமான தேவனுடைய ஆசாரியர் (ஆதி.14:18-20) சங்.110:2,4 ; எபி.5:6-11; 6:20; 7:28. இவர் "கெதர்லாகோமேரையும்" அவனோடிருந்த இராஜாக்களையும் முறியடித்துத் திரும்பி வந்தபோது சோதோமின் இராஜா புறப்பட்டு அவனுக்கு எதிர்கொண்டு போய், அவனை ஆசீர்வதித்து, அப்பமும் திராட்சரசமும் கொடுத்தான் ஆதி.14:17,20... ஆபிரகாம் இவருக்கு தான் கொள்ளையிட்ட எல்லாவற்றிலும் தசமபாகம் காணிக்கையாக கொடுத்தான். ஆபிரகாம் இவர் தேவனை உண்மையுடன் ஆராதிக்கிறவர் என்று கருதினான். கி.மு.1000 ஆண்டில் வாழ்ந்த தேவனுக்குப் பிரியமான தாவீதும் இவரை குறித்து சங்.110:4 எழுதின இவர் "இயேசுகிறிஸ்துவுக்கு முன் அடையாளமான ஆசாரியர் என காண்கிறான். அடுத்து யோவான் "இயேசுகிறிஸ்துவை உலகத்தின் (ஆதாம் முதல் இன்றுவரை பிறந்திருக்கும் 7500 கோடி மக்கள் மற்றும் இனி பிறக்கப்போகும் மனிதர்களுக்கும்) பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டி" என்றான் (யோவா.1:29). அதன்பிறகு நோவா ஆதி.8:20; ஆபிரகாம் ஆதி.12:7,8 ஈசாக்கு ஆதி.26:25; யாக்கோபு ஆதி.35:1-7; மற்றும் கி.மு.2000 ஆண்டில் வாழ்ந்த உத்தமனும் சன்மார்க்கனுமான யோபு (என் தேவன் எங்கே) மற்றும் மோசேயின் மாமனார் "எத்திரோ" மீதியானின் ஆசாரியராக இருந்தார் (யாத்.18:1,12). இவர்கள் ஆசாரியர்களாக கருதப்பட்டு பலி செலுத்திவந்தனர். ஒவ்வொரு குடும்பத்தலைவனும், குடும்பத்தின் எண்ணிக்கைக்குதக்கதாக பஸ்கா (கடந்துபோகுதல்) பலிசெலுத்தினர் யாத்.12:6-8; 34:25. தேவன் இஸ்ரவேலரை தெரிந்துகொண்டு சீனாய் மலையில் எகிப்தின் அடிமை தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட மக்களுக்கு தேவ ஆலோசனையின்படி 'லேவி' கோத்திரத்திலிருந்து ஆரோனை தெரிந்துகொண்டு அவனை ஆசாரியராக்கினார் யாத்.6:7; 19:5,6 பிறகு அவனின் சந்ததியாரான நாதாப், அபியு, எலெயாசார், இத்தாமர் எண்.3:2,12; யாத்.28:1. 'தாண்' கோத்திரத்தாருக்கு ஒரு லேவிய இளைஞனும், மோசேயின் சந்ததியில் வந்த ஒரு குடும்பத்திற்கு ஆசாரியனானக பணியாற்றினான். நியா.17,18 அதிகாரம். எப்பிராயீம் மலைதேசத்தின் எல்க்கானாவின் மகன் சாமுவேல் (1:1) நாளா.6:25-28; இவர் தீர்க்கதரிசியாகவும், நியாயாதிபதியாகவும், ஆசாரியராகவும், ஏலி (யேகோவா பெரியவர்) அவரின் குமாரர்கள் ஓப்னி (பயனற்றவன்) பினெகாசு (தவளைக்குஞ்சு) மரணத்திற்குப் பிறகு பணியாற்றினான்.

சிறுவர் பகுதி

# பத்து வெள்ளிக்காசு

**வேதபகுதி: லூக்கா 15:1-10**



ஒரு நாள் இயேசுவினுடைய உபதேசங்களை கேட்க ஆயக்காரர்களும், பாவிகளும் கூடிவந்தனர். அப்பொழுது பரிசேயரும், வேதபாரகரும் முறுமுறுத்து இவர் பாவிகளோடு சாப்பிடுகிறார் என்றனர். இதை கண்ட இயேசு ஆண்டவர் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார். அது என்ன உவமை என்று தெயுமா?

ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசு வைத்திருந்தாள். அதில் ஒன்று காணாமற்போனது, உடனே அந்த வெள்ளிக்காசை தேடு தேடுனு தேடினாள் கண்டு பிடிக்கமுடியவில்லை ஒரு விளக்கை கொளுத்தி அதை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டுமென்று வீடு முழுவதையும் பெருக்க ஆரம்பித்தாள். அப்படி பெருக்கிக் கொண்டுவரும்போது அவள் காணாமற்போட்ட வெள்ளிக்காசை கண்டுபிடித்தாள். உடனே அவளுக்கு மிகவும் சந்தோஷம் இவ்வளவுநேரமாக அதை தேடிகண்டுபிடிக்கமுடியாமல் கடைசி நேரத்தில் விளக்கை கொளுத்தி வீடு முழுவதும் பெருக்கி கண்டுபிடித்தேன் என்று சந்தோஷப்பட்டு தன் சிநேகிதிகளையும், அயல் வீட்டுக்காரிகளையும் வரவழைத்து காணாமற்போன என் வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தேன் என்னோடு கூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதைப்போல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

எவ்வளவு அருமையான உவமை பார்த்தீர்களா? மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். நாம் கூட எதையாவது காணாமற்போட்டு விட்டு பின்பு தேடிக் கண்டுபிடித்தால் எவ்வளவு சந்தோஷம் படுவோம். அதைபோல காணாமற்போன ஆடுகளை தேடி நம் ஆண்டவர் வந்தார். அந்த ஆடுகளை அவர் கண்டுகொள்ளும்போது சந்தோஷம் அடைவார். அவர் மட்டுமல்ல பரலோகத்தில் உள்ள தூதர்களும் சந்தோம் அடைவார்கள்.

நீங்கள் ஆண்டவருடைய பிள்ளைகளாக இருக்கிறீர்களா? அல்லது பிசாசின் பிள்ளைகளாக காணாமற்போன ஆட்டைப் போல் இருக்கிறீர்களா? ஆண்டவருடைய பிள்ளைகள் என்றால் ஆண்டவர் சொல்லும் வசனத்திற்கு கீழ்ப்படிந்து கீழ்ப்படிதலுள்ள ஆடுகளாக இருக்கவேண்டும்.

**மனப்பாட வசனம்**

"நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" *(லூக்கா13:3)*

## வேத அறிவுப் போட்டி எண்.93

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், எதுவே நலம்?
2. பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்களா?
3. உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் எதைக் கற்றுக்கொள்வார்கள்?
4. நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று யாருக்கு கர்த்தர் கட்டளையிட்டார்?
5. ஜனங்களின் வழிபாடுகள் எப்படியிருக்கிறது? காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள் அது எவன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும்?
6. எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று எவன் சொல்லியிருக்கிறான் என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?
7. இஸ்ரவேலே, உன் தீர்க்கதரிசிகள் வனாந்தரங்களிலுள்ள எவைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் என்று யார் மூலம் கர்த்தருடைய வார்த்தை உண்டானது?
8. மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. இராமுழுதும் போஜனம்பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்த ராஜா யார்?
10. எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்று பவுல் எந்த சபைக்கு எழுதப்பட்டுள்ள நிருபத்தில் வாசிக்கிறோம்?

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23).

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

**BATLAGUNDU**

**CHURCH OF CHRIST**

MEETS HERE

*17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202, DINDIGUL DIST.*



Phone:4543 263278,
Mobile: 9443558041
e-mail: thewordofchrist@sanchamet.in

**ஆராதனை நேரம்** ஞாயிறு காலை 8.30 **மணி**
தேவனை ஆவியோடும், உண்மையோடும்
தொழுது கொள்ள யாவரையும் அன்புடன் **அழைக்கிறோம்**

**உங்கள் வானொலியில்**
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 **மீட்டரில்**
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 **மணி வரை**
கேளுங்கள் மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**
**Sri - Every Sunday 6.15 a.m**
**Tamilan - Every Monday 6.00 a.m**
**Imayam - Every Thursday 6.15 a.m**

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**
தேவைக்கு உடனே ரூ.15/–
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

**T.V & Radio**–வில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய CD&DVD - க்கள்
தேவைப்படுவோர் ரூ.100/– அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.
சகலத் தொடர்புக்கும்

**R.N.I. No. TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Licensed to Post Without Pre-Payment License No. TN/WPP-25/SR 2006-2008 Posted at Batlagundu Post Office on 10th May 2008.**

Monthly Magazine

To

From

*Editor*
THE WORD OF CHRIST
*P.O. Box No.5,*
*Batlagundu - 624 202*
*S.India.*